2020 ஜனவரி 9]

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/ 2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி சட்டத்தில் நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சி, முதல் நிலை நகராட்சி, Selection Grade, Special Grade என்று 5 வகைகளாகவும், பேரூராட்சிகள் 3 வகைகளாகவும், ஊராட்சிகள், தேர்வு நிலை ஊராட்சி, சிறப்பு நிலை ஊராட்சி என 2 வகைகளாகவும், இருக்கின்றன. மக்கள் தொகையின் அடிப்படையில், வருமானத்தின் அடிப்படையில், நிருவாகத்தின் அடிப்படையிலே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது நம்முடைய உள்ளாட்சித் துறை, மூன்றாம் நிலை நகராட்சி என்பதை மட்டும் எடுத்துவிட்டு, இரண்டாம் நிலை நகராட்சியாக இருக்க வேண்டும் என்ற திருத்தச் சட்டத்தினை கொண்டு வந்திருக்கிறது. தற்போது சில மாவட்டங்களைப் பிரித்திருக்கின்றார்கள். இந்த மூன்றாம் நிலை நகராட்சியை மட்டும் எடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தாம்பரம் நகராட்சியிலிருந்து கடந்து, சிட்லபாக்கம் பேரூராட்சியைக் கடந்து, பல்லாவரம் நகராட்சியையும் கடந்து, திருநீர்மலை பேரூராட்சியையும் கடந்து, தாம்பரம் நகராட்சியின் எல்லை இருக்கிறது. 2 பேரூராட்சி, 1 நகராட்சியைக் கடந்து 1 நகராட்சி இருக்கிறது. சீர்காழியில் 28,000 பேருக்கு ஒரு நகராட்சி இருந்து கொண்டிருக்கிறது. அனகாபுத்தூரிலே 30,000 பேருக்கு ஒரு நகராட்சி இருந்து கொண்டிருக்கிறது. சிட்லபாக்கத்தில் 18 வார்டுகள் உள்ளன, செம்பாக்கத்தில் 15 வார்டுகள் உள்ளன. செம்பாக்கம் நகராட்சி ஆகிவிட்டது. சிட்லபாக்கம் இன்னும் பேரூராட்சியாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆக, ஒரு நகராட்சி, உள்ளாட்சி நிருவாகம் எப்படியிருக்கிறது என்றால், அதிகாரிகள் வைத்தது ஒரு சட்டம், ஒவ்வோர் அமைச்சர் சொல்வதும் சட்டம், வருகிறவர்கள், போகிறவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு அரசு செயல்படுகிறதா என்பது எனக்கு ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது.

நான் சொல்ல வருவது என்னவென்றால், எப்படி மாவட்டத்தைப் பிரிக்கிறீர்களோ, எப்படி நாடாளுமன்றத் தொகுதி, சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிக்கிறீர்களோ, அதைப்போல ஒரே தடவையாகப் பிரியுங்கள். அதற்கென ஒரு தனிக் குழுவை அமைத்து, எது அதிக மக்கள் தொகை கொண்டது என்பதை ஆய்வு செய்து, ஒரே தடவையாக பிரியுங்கள். ஊராட்சியில் 20,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி இருக்கிறது; பேரூராட்சியில்

50,000 மக்கள் தொகை கொண்ட பேரூராட்சி இருக்கிறது; ஆனால், நகராட்சியில் 28,000 மக்கள் தொகை இருக்கிறது. இந்தச் சட்டம் சரியா என்று பாருங்கள். உதாரணத்திற்காக ஒரு ஊரைத்தான் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். இன்னோர் உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், பெருங்களத்தூர் பேரூராட்சி ஒரு பெரிய பேரூராட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, இன்றைக்கு நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: பீர்க்கன்கரணை பேரூராட்சி என்பது ஜி.எஸ்.டி. ரோட்டிற்கு இந்தப் பக்கமும்,—Geographical level-லிலும் சரியில்லை, Population level-லிலும் சரியில்லை, Economic level-லிலும் சரியில்லை. ஆகவே, தயவுசெய்து அரசு இதில் தனிக் கவனம் எடுக்க வேண்டும். இப்போது எந்த நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்றால், மனசாட்சி உள்ளவர்களுக்குத் தெரியும், தாம்பரம் நகராட்சியைத்தான் முதலில் மாநகராட்சியாக தரமுயர்த்த வேண்டும். அங்கு மக்கள் தொகை அவ்வளவு அதிகம். இன்னும் சொன்னால், மக்கள் வரிப் பணம்—இப்போது இவ்வளவு சொல்கிறோம், இவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம், அரசுப் பணத்தில் 96% சம்பளம் கொடுப்பதற்கே போகிறது என்று சொல்கிறீர்கள். ஆனால், பல இடங்களில் அதிகாரிகளே கிடையாது. ஆக, இப்பொழுது நிருவாகம் சரியில்லாத ஒரு நிலை இருக்கிறது. நான் அதிகமாகச் சொன்னால் பேசுவதற்கு விடமாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் பேசவிட்டதால்தான் நீங்கள் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: நான் சபாநாயகருக்கு பயந்து, அடக்கம் ஒடுக்கமாக கொஞ்சம் குறைவாகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். 15 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. நேரத்தைப் பாருங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: உள்ளாட்சி நிருவாகத்தை, மாநகராட்சி நிருவாகத்தை நீங்கள் ஒட்டுமொத்தமாக சரி செய்ய வேண்டும். Instalment–ல் ஊராட்சியை பேரூராட்சியாக ஆக்காமல், பேரூராட்சியை நகராட்சியாக ஆக்காமல், நகராட்சியை மாநகராட்சியாக ஆக்காமல், மூன்றாம் நிலையை எடுத்துவிடுவதை நிறுத்தி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டை மாற்றியமைக்க வேண்டும்; இந்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

*__திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி வார்டுகளைப் பிரிக்கக்கூடிய விஷயம் குறித்து ஏற்கெனவே நடைபெற்ற கூட்டத்திலும் நான் சொன்னேன். சில ஊர்களில், குறிப்பாக திருநெல்வேலி மாநகராட்சியிலே மேலப்பாளையம் பகுதியில் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதைப்போல, கடையநல்லூர் பகுதியில் இருக்கிறார்கள், காயல்பட்டினம் பகுதியில் இருக்கிறார்கள். இதுபோன்ற ஏரியாக்களில் வார்டுகளைப் பிரிக்கும்போது, சில வார்டுகள் 10,000 வாக்காளர்களைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் வாழக்கூடிய வார்டுகள் அவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில், மற்ற வார்டுகளிலே 5,000 வாக்காளர்கள் இருக்கின்றார்கள். அந்த வார்டு நம்பர்களைக் குறிப்பிட்டுக்கூட நான் சென்ற கூட்டத்தொடரில் பேசினேன். அதேபோன்று, ஒரு வார்டு, நான்கு தெருக்களில் இருக்கக்கூடிய சில பகுதிகளை இணைத்து தனி வார்டாகப் பிரித்திருக்கிறார்கள். இதனால், முஸ்லிம்களுடைய பிரதிநிதித்துவம் குறையக்கூடிய அளவிலே இந்த வார்டுகளெல்லாம் இருப்பதை ஏற்கெனவே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தேர்தல் ஆணையரிடத்திலேகூட இதற்கான விவரங்களையெல்லாம் முழுமையாகக் கொடுத்திருக்கின்றோம். ஒரு சில இடங்களில்தான் முஸ்லிம் சமுதாயத்தின் பிரதிநிதிகள் வெற்றி பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தும்கூட, அந்த வார்டுகள் பிரிக்கப்பட்ட முறையிலே குளறுபடிகளெல்லாம் இருப்பதன் காரணமாக, முஸ்லிம் சமுதாயத்தினுடைய பிரதிநிதித்துவம் குறையக்கூடிய வகையிலே இருக்கின்றது. அதையும் சரி செய்யக்கூடிய முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 9]

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.ஆர். இராஜாவும் சரி, திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களும் சரி, சட்டமுன்வடிவில் பேசாமல் subject மாறியே பேசுகிறார்கள். சட்டமுன்வடிவு என்பது, மூன்றாம் நிலை நகராட்சிகள் குறித்தது. 2011 ஆம் ஆண்டிலேயே 3 ஆம் நிலை நகராட்சி இல்லை. அதேபோல் 528 பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுமாதிரி, நகராட்சிகளை upgrade செய்வதற்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னரே, இந்தமாதிரி மாற்றமெல்லாம் செய்ய முடியும். அதேபோல் தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த 49 மூன்றாம் நிலை நகராட்சிகளில் பெரும்பாலானவை சென்னை, வேலூர், ஈரோடு, திருப்பூர் போன்ற மாநகராட்சிகளுடன் எல்லை விரிவாக்கத்தின்போது இணைக்கப்பட்டன. சில மூன்றாம் நிலை நகராட்சிகள் இரண்டாம் நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இறுதியாக, மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சி, 5–1–2011 அன்று இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு தமிழகத்தில் மூன்றாம் நிலை நகராட்சிகள் எதுவும் தரம் உயர்த்தப்படவில்லை. இந்நிலையில் 1920 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில், மூன்றாம் நிலை நகராட்சிகளில் இருக்கும் வகைமுறைகளை இச்சட்டத்திலிருந்து நீக்குவது பொருத்தமாக இருக்குமெனக் கருதப்பட்டது. மேலும், தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெறஉள்ள நிலையில் பொதுமக்கள் மத்தியில் மூன்றாம் நிலை நகராட்சிக்கும் தேர்தல் நடைபெறுகிறது என்ற ஐயம் எழ வாய்ப்புள்ளது. எனவே, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் மூன்றாம் நிலை நகராட்சிகள் நிருவகிக்கும் வகைகளை நீக்க வேண்டுமென்ற நோக்கத்தில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் 11–11–2019 அன்று மேதகு ஆளுநர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட அவசரச் சட்டத்தை மாற்றியமைக்க ஏதுவாக இந்தச் சட்டமுன்வடிவைச்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2020 ஜனவரி 9

சட்டமாக இயற்ற தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இதில் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம் இல்லை என்று சொன்னார். இதில் அந்தமாதிரி பாகுபாடே கிடையாது. அதேபோல், நீதிமன்றங்களில் நிறைய வழக்குகள் வந்தன. இதில் பாகுபாடுகள் எதுவுமே இல்லை. எல்லாமே விதிமுறைக்கு உட்பட்டு எந்தப் பாகுபாடும் இல்லாமல் சரியான முறையில்தான் போய்க்கொண்டிருக்கிறது. அதிகாரிகளுக்கு, அமைச்சர்களுக்கு, சாதாரண மனிதர்களுக்கு சாமானியன், பெரியவன் என எல்லோருக்கும் சட்டம் ஒன்றுதான். யாருக்குமே பிரிவெல்லாம் கிடையாது. எனவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவுக்கு, எந்தப் பிரிவும் இல்லாமல் சரியான முறையில், உறுப்பினர் சொல்வதுமாதிரி,இஸ்லாமியர்கள் இருக்கிற வார்டுகளில் இந்துக்கள் இருக்கிறார்கள். நாம் அந்தமாதிரி நிலைமைக்கே போகவில்லை. அந்தமாதிரி எண்ணமோ, ஐயமோ கிடையாது. அதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசைப் பொறுத்தவரையில், சரியான முறையில் இன்றைக்குச் செயல்படுகிறது. அதைத் தேர்தல் ஆணையம் சிறப்பான முறையில் செய்துகொண்டுள்ளது. அதனோடு ஒத்துழைத்து, நம்முடைய உள்ளாட்சித் துறை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, எந்தப் பாகுபாடு எண்ணமும் இதிலே கிடையாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். கடையநல்லூர் போன்ற நகராட்சிகளில் எந்தவித பாகுபாடும் இல்லை. அதற்குள் அதிகாரிகளிடமிருந்து notes வந்துவிட்டது. இதிலே எந்தவித பாகுபாடும் கண்டிப்பாக இல்லை. இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவுக்கு மூன்றாம் நிலை நகராட்சிகள் இல்லாத காரணத்தினாலே இதை நாம் எடுக்கிறோம், வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 24 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.

பிற்பகல் 1–55

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4–10–2016 அன்று நீதிப் பேராணையின்படி உள்ளாட்சி மன்றத் தேர்தலில் 7–வது முறையாக தனி அலுவலர் நியமன நீட்டிப்புக்காக இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையையும், நோக்கக் காரண விளக்க உரையையும் கூர்ந்து கவனித்தால், தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2019–ஐ திரும்பப் பெற வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.